# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*


<u>வழக்கு எண்.25256/விசாரணை/09</u>

**<u>விசாரணை நாள் 29.01..2010 – இராமநாதபுரம்</u>**

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. எம். செல்வகுமார்<br>த/பெ. மச்சக்காளை<br>நேசன்கலா சாலை பள்ளி (தெரு)<br>நாராயண தேவன்பட்டி அஞ்சல்<br>உத்தமபாளையம் வட்டம்<br>தேனி – 625 521. |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>தனி வட்டாட்சியர் அலுவலகம்<br>சமூக பாதுகாப்புத் திட்டம்<br>உத்தமபாளையம் தாலுகா<br>தேனி மாவட்டம். |

---------

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் இன்று (29.01.2010) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு. எம். செல்வகுமார் வரவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு. எஸ். காந்தி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், உத்தமபாளையம், தேனி மாவட்டம் வந்திருந்தார்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 02.09.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் பத்து இனங்களுக்கு தகவல்கள் வழங்குமாறு கோரியிருந்தார். சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல் பெறாததால், மனுதாரர் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 02.10.09 அன்று முதல் மேல்முறையீடும், சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 07.10.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடும் செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் இன்றைய விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது மனுதாரர் வராத நிலையில், மனுதாரர் தான் கோரிய தகவலை பொதுத் தகவல் அலுவலர் வழங்க வேண்டாமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய கடிதத்தின் நகலை இவ்வாணையத்திற்கு பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்ததன் அடிப்படையில் இவ்வழக்கில் மேலும் விசாரிப்பதற்கு ஏதுமில்லை எனக் கருதி இவ்வழக்கு இத்துடன் முற்றுப் பெறுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 09.2.2010
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவிப் பதிவாளர்.

<u>வழக்கு எண்.25256/09</u>
பொதுத் தகவல் அலுவலர்
தனி வட்டாட்சியர் அலுவலகம்
சமூக பாதுகாப்புத் திட்டம்
உத்தமபாளையம் தாலுகா
தேனி மாவட்டம்.

திரு. எம். செல்வகுமார்
த/பெ. மச்சக்காளை
நேசன்கலா சாலை பள்ளி (தெரு)
நாராயண தேவன்பட்டி அஞ்சல்
உத்தமபாளையம் வட்டம்
தேனி – 625 521.